**ஏப்ரல் – 25**

# TNPSC துளிகள்

- நாசாவின் செவ்வாய்க் கிரக ஹெலிகாப்டரான "இன்ஜெனியூட்டி" செவ்வாய்க் கிரகத்தில் ஆற்றலூட்டப்பட்டு அதன் மீது பறந்த முதல் விண்கலமாகும்.
    - இன்ஜெனியூட்டி எனப்படும் செவ்வாய்க் கிரக ஹெலிகாப்டர் என்பது, மற்றொரு கோளில் ஆற்றலால் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு விண்கலத்தைப் பறக்க வைக்க முடியுமா என சோதிக்க செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பப்பட்டு சூரிய சக்தியினால் ஆற்றலூட்டப்பட்ட ஒரு ஹெலிகாப்டர் ஆகும்.

# தேசியச் செய்திகள்

## ஐ.நா.வின் மூன்று அமைப்புகளுக்கு இந்தியா தேர்வு

- சமீபத்தில் ஐ.நா.வின் பொருளாதார மற்றும் சமூக மன்றத்தின் கீழ் இயங்கும் ஐ.நாவின் மூன்று அமைப்புகளுக்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- அவை,
    - குற்றத் தடுப்பு மற்றும் நீதி வழங்கும் ஆணையம் (CCPCJ - Commission on Crime Prevention and Criminal Justice)
    - பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான ஐ.நா அமைப்பின் நிர்வாக வாரியம் (ஐ.நா. பெண்கள் அமைப்பு),
    - உலக உணவுத் திட்டத்தின் நிர்வாக வாரியம் (WFP - World Food Programme) ஆகியவையாகும்.
- இந்த மூன்று அமைப்புகளுக்கும் இந்தியா ஒரு முழுமையான ஒப்புதல் முறையில் (acclamation) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்த ஒப்புதல் முறையில், ஒரு உறுப்பினர் நாட்டினைத் தேர்ந்தெடுப்பதற்கு வாக்கெடுப்புப் பயன்படுத்தப் படுவதில்லை.
- இருப்பினும், மற்ற உறுப்பினர் நாடுகள் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகவே இந்த அமைப்பிற்குத் தேர்ந்தெடுக்கப் படுகின்றன.

### *ஒப்புதல் முறையில் தேர்ந்தெடுத்தல்*

- ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு எந்தப் பிரச்சினையும் அற்ற (clean slate) ஒரு உறுப்பினர் நாடு தேர்ந்தெடுக்கப்பட முன்மொழியப்படும் போது ஒப்புதல் முறையில் வாக்கெடுப்பு நடத்தப் படும்.
- Clean Slate என்றால் அந்நாட்டின் வரலாற்றில் இதுவரை எந்தவொரு பிரச்சினையுமற்ற அல்லது எந்தவொரு விதிமீறலும் அல்லாத நிலை என்பதாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## மரண தண்டனை பற்றிய உலகளாவிய மறுசீராய்வு

- சமீபத்தில் அம்னெஸ்டி இன்டர்நேஷனல் என்ற அமைப்பு உலகளாவிய மரண தண்டனை பற்றிய மறுசீராய்வினை வெளியிட்டுள்ளது.
- அம்னெஸ்டி இன்டர்நேஷனல் வெளியிட்ட அறிக்கையின்படி, 18 நாடுகளில் சுமார் 483

மரண தண்டனைகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

- 2019 ஆம் ஆண்டில், நிறைவேற்றப்பட்ட மரண தண்டனைகளின் எண்ணிக்கை 657 ஆகும்.
- 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மரண தண்டனைகளின் எண்ணிக்கை 26% உயர்ந்துள்ளது.
- சீனா, ஈரான், எகிப்து, ஈராக் மற்றும் சவுதி அரேபியா போன்ற நாடுகள் என்ற வரிசையில் அதிக எண்ணிக்கையிலான மரண தண்டனைகள் நிறைவேற்றப் பட்டு உள்ளன.
- 483 தண்டனைகளில் 16 பெண்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.
- அவர்கள் எகிப்து, சவுதி அரேபியா, ஈரான் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- இந்தியா, கத்தார், ஓமன் மற்றும் தாய்வான் ஆகிய நாடுகள் மீண்டும் மரண தண்டனையை விதிக்கத் தொடங்கியுள்ளன.
- ஈரான் நாட்டில் 2019 ஆம் ஆண்டில் 100 ஆக இருந்த மரண தண்டனையின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டில் பாதியாக குறைந்து 45 ஆக உள்ளது.
- சவுதி அரேபியாவில் அதன் எண்ணிக்கை 85% குறைந்துள்ளது.
- சிரச்சேதம், தூக்கிலிடுதல், மின்சார அதிர்வு வழங்குதல், துப்பாக்கிச் சூடு மற்றும் விஷ ஊசி போன்ற மரண தண்டனை விதிக்கும் முறைகளை இந்நாடுகள் பின்பற்றின.

**METHODS OF EXECUTIONS IN 2020**[7]

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| BEHEADING | Saudi Arabia | | | | | | | |
| ELECTROCUTION | USA | | | | | | | |
| HANGING | Bangladesh | Botswana | Egypt | India | Iran | Iraq | South Sudan | Syria |
| LETHAL INJECTION | China | USA | Viet Nam | | | | | |
| SHOOTING | China | Iran | North Korea | Oman | Qatar | Somalia | Taiwan | Yemen |

- ஈரான் நாடு, மூன்று நபர்களுக்கு அவர்கள் 18 வயதிற்கும் குறைவான வயதில் செய்த குற்றத்திற்காக மரண தண்டனை விதித்து இருந்தது.
- போதைப் பொருள் தொடர்பான குற்றங்களில் சீனா, ஈரான் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் குறைந்தபட்சம் 30 பேருக்கு மரண தண்டனை விதித்துள்ளன.
- இந்தியா, சீனா, வங்க தேசம், வட கொரியா, வியட்நாம், மற்றும் தாய்வான் ஆகிய ஆசிய – பசிபிக் நாடுகள் 2020 ஆம் ஆண்டில் மரண தண்டனைகளை விதித்துள்ளன.
- பாகிஸ்தான், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் மரண தண்டனை எதுவும் விதிக்கப்படவில்லை.
- சீனா உலகளவில் அதிக எண்ணிக்கையில் மரண தண்டனை விதிக்கும் நாடாகும்.
- இருப்பினும் சீனாவில் விதிக்கப்படும் மரண தண்டனைகளின் சரியான எண்ணிக்கை விவரம் தெரிவதில்லை.

*குறிப்பு*

- சாத் (Chad) நாடானது எந்தவொரு குற்றங்களுக்கும் மரண தண்டனை விதிப்பதை

நிறுத்தி விட்டது.

- மரண தண்டனை விதிப்பதை நிறுத்திய 22வது அமெரிக்க மாநில அரசு கொலராடோ ஆகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## நீல இயற்கைக் கூட்டணி

- நீல இயற்கைக் கூட்டணி என்பது ஐந்து முக்கிய பங்குதாரர்கள் மற்றும் சில இலாப நோக்கமற்ற அமைப்புகளின் ஒரு உலகளாவியக் கூட்டாண்மையாகும்.
- இதன் முக்கியப் பங்குதார அமைப்புகள் சர்வதேசப் பாதுகாப்பு அமைப்பு, உலக சுற்றுச்சூழல் வசதி, பியூ தொண்டு அறக்கட்டளை, மைன்டெரு அறக்கட்டளை மற்றும் ராம் மற்றும் மெலானி வால்டன் அறக்கட்டளை ஆகியவையாகும்.
- நீல இயற்கைக் கூட்டணி 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 அன்று தொடங்கப்பட்டது.
- இக்கூட்டணி ஐந்தாண்டுகளில் உலகப் பெருங்கடலில் 5% அளவினைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இக்கூட்டணி ஏழு பெருங்கடல் பகுதிகளைப் பாதுகாப்பதை இலக்காகக் கொண்டு உள்ளது.
- அவை,
  - அண்டார்டிகா
  - செசல்ஸ்
  - கனடா
  - பலாவு
  - மேற்கு இந்தியப் பெருங்கடல்
  - ஃபிஜி
  - தென் அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள டிரிஸ்டன் டா குன்ஹா தீவு

  ஆகியனவாகும்.

*குறிப்பு*

- பெருங்கடல்கள் ஆனது வானிலை, மழைப் பொழிவு மற்றும் காற்றில் ஆக்சிஜன் அளவு ஆகியவற்றைச் சீரமைப்பதால் மனித வாழ்விற்கு மிகவும் முக்கியமானவை ஆகும்.
- பெருங்கடல்கள் தற்போது மாசுபாடு, பருவநிலை மாற்றம் மற்றும் அதிகமாக மீன்பிடித்தல் போன்றவற்றினால் மிகப்பெரிய அபாயத்தில் உள்ளன.

# மாநிலச் செய்திகள்

## தேர்தல் பத்திரங்கள் நன்கொடையாளர் பெயர்

- ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (JMM) கட்சியானது தனக்கு தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை வழங்கிய நிறுவனத்தின் பெயரை அறிவித்த முதல் கட்சியாகும்.
- கட்சியின் 2019-20 ஆம் ஆண்டின் பங்களிப்பு அறிக்கையில் ரூ.1 கோடி நன்கொடை வழங்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- ஜார்க்கண்டின் அந்த ஆளும் கட்சியினுடைய பங்களிப்பு அறிக்கையின் படி, அலுமினியம் மற்றும் தாமிரம் தயாரிக்கும் நிறுவனமான ஹிண்டால்கோ இந்த நன்கொடையை வழங்கியுள்ளது.

### ஜெகன்னன்னா வித்யா தீவென்ன திட்டம்

- ஆந்திரப் பிரதேசத்தின் முதல்வர் Y.S.ஜெகென்மோகன் ரெட்டி சமீபத்தில் 2021-2022 ஆம் ஆண்டிற்கான ஜெகன்னன்னா வித்யா தீவென்ன என்ற திட்டத்தின் கீழ் ரூ.672 கோடி மதிப்பிலான முதல் தவணையை வழங்கி தொடங்கி வைத்தார்.
- இது 10.88 லட்சம் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணத்தைத் திரும்பச் செலுத்தியது.
- இது வரை ஜெகன்னன்னா வித்யா தீவென்ன திட்டத்தின் கீழ் மொத்தமாக ரூ.4,879 கோடி வழங்கப் பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நிதி நெருக்கடியின் காரணமாக தமது கல்விக் கட்டணங்களைச் செலுத்த இயலாத அனைத்து மாணவர்களுக்கும் ஊக்கத் தொகை வழங்குவதாகும்.
- இத்திட்டம் உயர்கல்வி பெற விரும்பும் மாணவர்களுக்கு உதவுவதில் அதிக ஈடுபாடு செலுத்துகிறது.
- இத்திட்டம் மாநிலத்தின் 14 லட்சத்திற்கும் மேலான மாணவர்களுக்குக் கல்விக் கட்டணத்தினைத் திரும்ப வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.
- இத்திட்டம் நேரடியாக இத்தொகையினை அந்த மாணவர்களின் அம்மாக்களின் வங்கிக் கணக்கில் செலுத்தும்.
- இதற்கு முன்பு இத்தொகையானது கல்லூரிகளின் உரிமையாளர்கள் கணக்கில் செலுத்தப் பட்டது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### பிரியங்கா மோஹித்தே



- மேற்கு மகாராஷ்டிராவின் சதாராவைச் சேர்ந்த பிரியங்கா மோஹித்தே அவர்கள் அன்னபூர்ணா மலைச் சிகரத்தில் ஏறி சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.
- இவர் அந்த உயரத்தைத் தொட்ட முதல் இந்தியப் பெண் மலை ஏறும் நபவராவார்.
- அன்னபூர்ணா மலைச் சிகரம் உலகின் 10 உயரிய மலைச் சிகரங்களுள் ஒன்றாகும்.

- அன்னபூர்ணா மலைச் சிகரம், ஏறுவதற்கு மிகவும் கடினமான மலைகளுள் ஒன்றாகவும் கருதப் படுகிறது.

### மைதாவோளு நரசிம்மன்

- முன்னாள் இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் மைதாவோளு நரசிம்மன் அவர்கள் தனது 94 வயதில் இயற்கை எய்தினார்.
- இவர் 1977 ஆம் ஆண்டின் மே முதல் நவம்பர் வரையிலான காலகட்டத்தில் ரிசர்வ் வங்கியின் ஆளுநராக பணியாற்றினார்.
- மேலும் இவர் 1991 ஆம் ஆண்டில் நிதி அமைப்பின் மீதான குழுவிற்கும், 1998 ஆம் அண்டில் வங்கித் துறை சீர்திருத்தங்கள் குறித்த குழுவிற்கும் தலைவராக பணியாற்றினார்.
- இவர் இந்திய வங்கிச் சீர்திருத்தங்களின் தந்தை என்றறியப் படுகிறார்.

## விளையாட்டுச் செய்திகள்

### தண்ணீர் சார்ந்த விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சாகச அமைப்பு

- தண்ணீர் சார்ந்த விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சாகச அமைப்பு (Water sports & Adventure Institute – WSAI) ஒன்றினை உத்தரகாண்டிலுள்ள தெகிரி அணைக்கட்டில் இந்திய திபெத்திய எல்லைக் காவல்படை நிறுவியுள்ளது.
- இந்த அமைப்பானது முதல்வர் திராத்சிங் ராவத் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் கிரண் ரிஜூஜூவினால் திறந்து வைக்கப் பட்டது.
- அவுலியிலுள்ள (Auli) இந்திய திபெத்திய எல்லைக் காவல்படையின் மலையேற்ற மற்றும் பனிச்சறுக்குப் போட்டிகள் நிறுவனம் இதை சுயாதீனமாக இயக்கும்.
- இந்த அமைப்பானது வான், நீர் மற்றும் நிலம் சார்ந்த விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சாகச நிகழ்வுகளில் பயிற்சி வழங்கும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★